கிளாம்பாக்கத்தில் ரெயில்வே பணிகள் நிறைவு

வேளச்சேரி – பரங்கிமலை பறக்கும் ரெயில் சேவை மார்ச் மாதம் தொடங்கும்

உயர் அதிகாரிகள் தகவல்

சென்னை, பிப்.3

வேளச்சேரி – பரங்கிமலை பறக்கும் ரெயில் சேவை மார்ச் மாதம் தொடங்கப்படும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

பட்ஜெட்டில் ரெயில்வே திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பகிர்வு குறித்து மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் டெல்லியில் இருந்தவாறு காணொலி காட்சியாக தமிழ்நாடு, கேரளா, ஆந்திர, தெலுங்கானா, கர்நாடாக மாநில நிருபர்களுக்கு விளக்கம் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து மத்திய பட்ஜெட்டில் தமிழக ரெயில்வேக்கு நிதி ஒதுக்கியது குறித்து தெற்கு ரெயில்வே கூடுதல் பொது மேலாளர் விபின் குமார், சென்னை கோட்ட மேலாளர் சைலேந்திர சிங், தெற்கு ரெயில்வே நிர்வாக தலைமை அதிகாரி சுஷில் குமார் மவுரியா ஆகியோர் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது:

தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு கடந்த மத்திய பட்ஜெட்டில் ரூ.6,331 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த பட்ஜெட்டில் தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு ரூ.7,611 கோடியும், கேரளா ரெயில்வே திட்டங்களுக்கு ரூ.3,795 கோடியும் என மொத்தம் ரூ.11,406 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு புதிய மற்றும் அகலப்பாதை திட்டங்களுக்கும் ஒப்புதல் அளித்து, நிதி ஒதுக்கீடு செய்துள்ளன. தமிழகத்தில் நடக்கும் புதிய ரெயில் பாதை திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்திட, தமிழக அரசிடம் தொடர்ந்து பேசி வருகிறோம்.

அம்ரித் நிலையத் திட்டத்தின் கீழ்

தமிழ்நாட்டில் 77 ரயில் நிலையங்கள் முழுமையான மறுசீரமைப்பிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்காக மொத்தம் ₹3,147 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. சிதம்பரம், ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, காரைக்குடி சந்திப்பு, பொள்ளாச்சி சந்திப்பு, திருவாரூர் சந்திப்பு, செயின்ட் தாமஸ் மவுண்ட் உள்ளிட்ட 18 நிலையங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. பொள்ளாச்சி சந்திப்பு நிலையத்தின் இரண்டாம் கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

எழும்பூர் ரெயில் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் தண்டவாளம், நடைமேடை பணிகள் மே மாதத்துக்குள் முடிக்கப்படும். அதன்பின், தாம்பரத்துக்கு மாற்றப்பட்ட எக்ஸ்பிரஸ் ரெயில்கள் மீண்டும் எழும்பூரிலிருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே தொடங்கி நிறுத்தப்பட்ட கூடுவாஞ்சேரி ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம் கடலூர் ஆகிய ரெயில் பாதை பணிகள் மீண்டும் தொடங்க பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளாம்பாக்கம்

கிளாம்பாக்கம் ரெயில் நிலையப் பணிகளில் ரெயில்வே துறை சார்ந்த பணிகள் முடிந்துள்ளன. ஆனால், ரெயில் நிலையத்திலிருந்து பஸ் நிலையத்துக்கான அணுகுசாலை, நடைமேம்பாலம் உள்ளிட்ட மாநில அரசு சார்ந்த பணிகள் நடைபெற வேண்டியுள்ளது. மார்ச் மாதத்துக்குள் பணிகள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

வேளச்சேரி – பரங்கிமலை பறக்கும் ரெயில் திட்டம் பணிகள் நிறைவடைந்துள்ளன. தெற்கு ரெயில்வே சார்பில் ரெயில்வே பாதுகாப்பு கமிஷனருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் இந்த மாதம் ரெயில் வழித்தடத்தில் ஆய்வு மேற்கொள்ள உள்ளார். அடுத்த மாதம் (மார்ச்) முதல் வாரத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

ரயில் பாதைகளில் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து சீராக்கத்திற்காக 769 மேம்பாலங்கள் மற்றும் அடிப்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. கவச் (Kavach) தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு 481 வழித்தட கிலோமீட்டர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, பெரும்பாலான பகுதிகளில் பணிகள் முடிந்துள்ளன அல்லது நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் ரயில்வே நவீனமயமாக்கல், பயணிகள் அனுபவ மேம்பாடு மற்றும் மாநிலம் முழுவதும் இணைப்புத் திறன் அதிகரிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆர்.எம்.கே மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 22ம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள்

சென்னை, பிப். 3–

சென்னையை அடுத்த கவரப்பேட்டையில் ஆர்.எம்.கே மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் 22 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் விழாவுக்கு ஆர். எம். கே கல்விக் குழுமத்தின் தலைவர் வித்யாஸ்ரனா ஆர். எஸ். முனிரத்தினம் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற என்.ராஜசேகர் (தலைமை பிராந்திய மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, வேலூர்) மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, விழாவினை தொடங்கி வைத்துப் பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கி

கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், குழுப் போட்டியிலும் வெற்றி பெற்ற முல்லை அணி கேப்டன் யுத்தசாய் சு மற்றும் துணை கேப்டன் டெவின்ராஜ் ஆகியோருக்கு கோப்பைகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

விழாவில் கல்விக் குழும தலைவர் ஆர். எஸ். முனிரத்தினம், கல்விக் குழுமத்தின் துணை தலைவர் ஆர். எம்.கிஷோர், ஆலோசகர் வி. மனோகரன், பள்ளியின் முதல்வர் அவன அரசு, துணை முதல்வர் சி.கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

'டேக் டெவலப்பர்ஸ்' கட்டுமான நிறுவனத்தின் விளம்பரத் தூதராக ஏ.ஆர். ரஹ்மான் நியமனம்

5 குடியிருப்புத் திட்டங்கள் அறிமுகம்

சென்னை, பிப். 3–

வேகமாக வளர்ந்து வரும் கட்டுமான நிறுவனம் டேக் டெவலப்பர்ஸ் புகழ் பெற்ற இசை அமைப்பாளர் இசைப் புயல் ஏ.ஆர். ரஹ்மானைத் தமது விளம்பரத் தூதராக அறிவித்தது. அவரது முன்னிலையில் சுமார் 1,000 புதிய வீடுகள் கொண்ட ஐந்து குடியிருப்புத் திட்டங்கள் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்குடியிருப்புத் திட்டங்கள், போரூர் அருகேவுள்ள கட்டுப்பக்கம், சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்குவார்சத்திரம், போரூர் ராமாச்சந்திரா மருத்துவமனைக்கு அருகேயுள்ள குமணன் சாவடி, ஓ.எம்.ஆர்–ல் உள்ள சோழிங்கநல்லூர் மற்றும் சிறுசேரி ஆகிய இடங்களில் கட்டப்படவுள்ளன.

நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் எஸ். சுரேஷ் குமார் பேசுகையில், "நாங்கள் வெறும் கட்டிடமதங்கள் மட்டும் கட்டாமல், வாழ்க்கையை சுவாரஸ்யப்படுத்தும் வகையில் மகிழ்ச்சியான இல்லங்களை உருவாக்குகிறோம். இந்திய மதிப்புகளில் வேரூன்றி, உலகளவில் அங்கீகாரம் பெற்ற ஏ.ஆர்.ரஹ்மானின் பயணம், நீண்டகால மதிப்புடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த கட்டுமானங்களை வழங்குவதற்கான எங்கள் உறுதிப் பாட்டுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது'' என்றார்.

ஏ.ஆர். ரஹ்மான் பேசுகையில், "இதயத்திலிருந்து இறையை உருவாக்குவதைப் போல, அன்புடைய அழகான வீடுகளை உருவாக்கும் குழுவை நான் டேக் நிறுவனத்தில் காண்கிறேன். ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சி பொங்கும் வகையில் வீடுகளைக் கட்டிவரும் டேக் டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் விஷயங்களை நான் மதிக்கிறேன்" என்று தெரிவித்தார்.

டேக் டெவலப்பர்ஸ் நிறுவனம் வரவிருக்கும் நாட்களில், ஏ.ஆர். ரஹ்மானை பிராண்டின் அம்பாசிடராகக் கொண்டு டிஜிட்டல், பிரிண்ட், ஹோர்டிங்ஸ் மற்றும் டி.வி. விளம்பரங்களை வெளியிடவுள்ளது. நம்பகத்தன்மை, சிறந்த வடிவமைப்பு மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்றவாறு வாழும் இல்லங்களைத் தேடும் ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் டேக் நிறுவனத்தின் நற்பெயரை வலுப்படுத்த இந்த முயற்சி உதவும்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட முன்னனி கட்டுமான நிறுவனமாகிய டேக் டெவலப்பர்ஸ், 2014ல் நிறுவப்பட்டது. 12 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் இதுவரை 110க்கும் மேற்பட்ட குடியிருப்புத் திட்டங்கள், 45 லட்சம் சதுர அடிக்கு மேல் கட்டுமானம் மற்றும் 3000க்கும் அதிகமான மகிழ்ச்சியான வாடிக்கையாளர்களுடன் நகர்ப்புற வாழ்க்கை அனுபவங்களை மறுவரையறை செய்து வருகிறது.

kotak Kotak Mahindra Bank — **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்** — **சுவாதீன அறிவிப்பு**

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400051,
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், 185, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 600 006

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆம் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் /உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட மேற்சொன்ன அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித விலைங்கும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. **பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

	கடன்தாரர், உடன் கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண், கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
1	**1. பக்தவச்சலம்** K S/o. **கண்ணையாராஜ் &** **2. வித்யாவதி** S W/o **பக்தவச்சலம்** K, இருவரது வசிப்பிடம்: மனை எண். 29, ராஜாஜி தெரு, ஜீஆர்கே ஹவுஸ், சீனிவாசபுரம், கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம், சென்னை, தமிழ்நாடு, மேலும்: மனை எண். 53, சர்வே எண். 321/2A, 2B, 2G, ஸ்ரீ சாய் கோல்டன் ஹோம்ஸ் பகுதி II A, ஆத்தூர், செங்கல்பட்டு, சென்னை, தமிழ்நாடு 603101 **கடன் கணக்கு எண்:** 15600000926. **அனுமதிக்கப்பட்ட கடன் தொகை:** ரூ.18,34,280/– (ரூபாய் பதினெட்டு லட்சத்து முப்பத்து நாலாயிரத்து இரண்டு நூற்றி எண்பது மட்டும்)	காலி வீட்டு மனையின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.53–ல் 1200 சதுர அடி பரப்பளவு கொண்டது, சர்வே எண்.321/2B, 321/2H, ஸ்ரீ சாய் கோல்டன் ஹோம்ஸ் பகுதி II, A" என பெயரிடப்பட்ட லேஅவுட்டில் உள்ளது. அங்கீகார எண். LP ஆல் அங்கீகரிக்கப்பட்டது. LP./D.D.C.P.No.305/2010, எண்.45 ஆத்தூர் 'ஏ' பிளாக் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு 603101 மற்றும் எல்லைகள் : வடக்கு: மனை எண்.52, தெற்கு: மனை எண்.54, கிழக்கு: மனை எண்.43, மேற்கு: 23 அடி 6 பிரதான சாலை. விஸ்தீரணம் : வடக்கு: 60'0, தெற்கு: 60'0, கிழக்கு: 20'0, மேற்கு: 20'0 மேற்கூறிய சொத்து, கட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் அமைந்துள்ளது மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை II சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. **அடமானதாரரின் பெயர்: திருமதி. வித்யாவதி** S.	1. 29.01.2026 2. அடையாள சுவாதீனம் 3. 26.09.2025 4. 02.01.2026 தேதியின்படி நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.14,81,468/– (ரூபாய் பதினான்கு லட்சத்து எண்பத்தோராயிரத்து நாநூற்று அறுபத்தியெட்டு மட்டும்) மற்றும் இதனுடன் 03.01.2026 முதல் முழுத்தொகையும் செலுத்தி முடிக்கும் வரை பொருந்தக்கூடிய வட்டி.
2	**1. கிருஷ்ணகுமார்** V S/o. **வெங்கட ரமணன்** P V & **2. வெங்கட ரமணன்** P V, S/o. **வெங்கடேசன்,** முகவரி: எண். 21/ஏ, ஒன் 3வது குறுக்குத் தெரு, வெங்குடுசாமி லேஅவுட், தான்னார் பாந்தா, பீனமேடு நைல் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641004, மேலும்: மனை எண் 29, பிளாட் எண். F2, 1வது மாடி, தி நேஜா பிளாட்ஸ் விஜயலட்சுமி கார், வெள்ளஞ்சேரி, சென்னை, தமிழ்நாடு 603202 **கடன் கணக்கு எண் : 08400001975. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை:** ரூ.27,01,497/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து ஆயிரத்து நானூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)	சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.F2, முதல் மாடி நேஜா பிளாட்ஸ் என்று அழைக்கப்படும் கட்டிடத்தில் சுமார் 890 சதுர அடி (பொதுவான பகுதி உட்பட) அளவிலான பொதுவான கட்டப்பட்ட பகுதியின் பங்குகளை உள்ளடக்கியது, சூப்பர் பில்டப் ஏரியா 910 சதுர அடி மற்றும் காலியாக உள்ள நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு நிலம் 355 சதுர அடி. மனை எண்.29, விஜயலட்சுமி நகர், எண்.51 வல்லஞ்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுகா, பட்டா சர்வே எண்.126/35ன் படி சர்வே எண்.116/1A2, 116/1A3, பட்டா எண்.485ல் அமைந்துள்ளது, செங்கல்பட்டு இணை II சார் பதிவு மாவட்டத்திற்குள் 2850 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளது, மேலும் இது பின்வருமாறு எல்லைகளுக்குள் உள்ளது: வடக்கு: காலி நிலம், தெற்கு: மனை எண்.28, கிழக்கு: 20 அடி சாலை, மேற்கு: மனை எண். 14 மற்றும் 15. **அடமானதாரரின் பெயர்: கிருஷ்ணகுமார்** V.	1. 29.01.2026 2. அடையாள சுவாதீனம் 3. 25.09.2025 4. 02.01.2026 தேதியின்படி நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.49,89,962/– (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்திரண்டு மட்டும்) மற்றும் இதனுடன் 03.01.2026 முதல் முழுத்தொகையும் செலுத்தி முடிக்கும் வரை பொருந்தக்கூடிய வட்டி.
3	**3. உதயகுமார் சங்கர்** S/o. **M. சங்கர் &** **2. பாலுப்பிரியா** R, W/o. **உதயகுமார் சங்கர்,** இருவரது வசிப்பிடம் : 10/65 பிளாட்பார்ம் தெரு, குன்றத்தூர், கரவல் நிலையம் அருகில், காஞ்சிபுரம், தமிழ்நாடு, 600069, மேலும் இருவரது வசிப்பிடம்: மனை எண் 25, பிளாட் எண் S 2, 2வது தளம், ஸ்ரீ மகாலட்சுமி நகர் எக்ஸ்டென்சன் V, கூடுவாஞ்சேரி – நந்திவரம், சென்னை, தமிழ்நாடு, 603202. **கடன் கணக்கு எண்: 12800003277 அனுமதிக்கப்பட்ட கடன் தொகை:** ரூ.31,74,775/– (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று எழுபத்து ஐந்து மட்டும்)	காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, எண்.6 நந்திவரம் கிராமத்தில், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட, சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட இடத்தில், D.T.C.P./L.P.740/91ல் ஒப்புதல் பெற்ற 'ஸ்ரீ மகாலட்சுமி நகர் எக்ஸ்டென்சன் V" என்ற பெயருள்ள மனைப்பிரிவில், சர்வே எண் 96/1 (பகுதி), பட்டா எண் 7215 மற்றும் பட்டாவிற்பட்டு புதிய உட்பிரிவு சர்வே எண் 96/10ல் அமைந்துள்ள, 2000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட மனை எண் 25ல், 448 சதுர அடி பிரிக்கப்படாத நிலத்தின் பங்கில் 388 சதுர அடி பிரிக்கப்படாத நிலத்தின் பங்குடன், இரண்டாவது தளத்தில் 864 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு கொண்ட ஆர்.சி.சி கட்டிடமான பிளாட் எண்.S2 என்று குறிப்பிடப்படும் சொத்து, அதன் அனைத்து வசதிகள் மற்றும் கார் பார்க்கிங் (வாகன நிறுத்துமிடம்) உட்பட அனைத்தும். **அடமானதாரரின் பெயர்: உதயகுமார் சங்கர் மற்றும் பாலுப்பிரியா** R	1. 29.01.2026 2. அடையாள சுவாதீனம் 3. 29.10.2025 4. 02.01.2026 தேதியின்படி நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.66,81,922/– (ரூபாய் அறுபத்தி ஆறு லட்சத்து எண்பத்தி ஒராயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி இரண்டு மட்டும்) மற்றும் இதனுடன் 03.01.2026 முதல் முழுத்தொகையும் செலுத்தி முடிக்கும் வரை பொருந்தக்கூடிய வட்டி.
4	**1. குமார்** R S/o **ராஜ &** **2. சரஸ்வதி** R W/o **ராஜ,** முகவரி: எண்.15/84, வெங்கடேஸ்வரா நகர் 1வது விரிவாக்கம், 2வது தெரு, விருகம்பாக்கம், சென்னை 600092, மேலும்: சர்வே எண். 77/3, கதவு எண். 3/449, பஜனை கோவில் தெரு, மதனந்தபுரம், குன்றத்தூர், சென்னை 600001 **கடன் கணக்கு எண் : 08400000140. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை:** ரூ.30,00,000/– (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்)	நிலம் மற்றும் கட்டிடத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். நிலத்தின் விஸ்தீரணம் 1799 சதுர அடி. சர்வே எண். 77/3, மதனந்தபுரம் கிராமம் கதவு எண்.3/449, பஜனை கோயில் தெரு, மதனந்தபுரம் பேரூர், சென்னை 600116 மற்றும் எல்லை: வடக்கு: திரு. பிரகாஷுக்குச் சொந்தமான நிலம், தெற்கு: பஜனை கோயில் தெரு, கிழக்கு: வேளாங்கண்ணி நகர், மேற்கு: காலி நிலம். **அடமானதாரரின் பெயர்: குமார்** R	1. 29.01.2026 2. அடையாள சுவாதீனம் 3. 25.09.2025 4. 02.01.2026 தேதியின்படி நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.1,86,14,451/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி ஆறு லட்சத்து பதினான்காயிரத்து நாநூற்று ஐம்பத்தி ஒன்று மட்டும்) மற்றும் இதனுடன் 03.01.2026 முதல் முழுத்தொகையும் செலுத்தி முடிக்கும் வரை பொருந்தக்கூடிய வட்டி.
5	**1. டேவிட் பிரபாகரன்** R, S/o. **ராதாகிருஷ்ணன் &** **2. ஜெயசீலி** D W/o **டேவிட் பிரபாகரன்** R, முகவரி: 1/705, 3வது பிரதான சாலை தெற்கு லட்சுமி நகர், முடிக்குர், தெற்கு, மண்ணிவாக்கம், நடேசன் பள்ளி, சென்னை, தமிழ்நாடு 600048, மேலும் முகவரி: பிளாட் எண். F2, 1வது தளம், லாரட்ஸ் பிரசன்ஸ், மனை எண் 2 கிழக்கு பகுதி, மனை எண் 3, அன்னை அவென்யூ, ரத்தினமங்கலம், சென்னை, தமிழ்நாடு 600048 **கடன் கணக்கு எண்: 15600000789. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை:** ரூ.19,66,268/– (ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்தாறாயிரத்து இருநூற்று அறுபத்தெட்டு மட்டும்)	சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண் F2, முதல் தளம் 585 சதுர அடி பரப்பளவு கொண்டது. பொதுவான பகுதி மற்றும் திலங்கள் உட்பட, மனை எண் 2 (கிழக்கு பகுதி) 1313 சதுர அடி, & மனை எண் 3, 1213 சதுர அடி. பட்டா புதிய பிரிவு எண்களின்படி ச.எண் 94/8B, ச.எண்.94/8C, ச.எண்.94/80 & ச.எண்.94/9, பட்டா எண் 16956ல் உள்ளது. 94/10 & 94/8C1B, புதிய பட்டா எண் 1900, பட்டா புதிய துணைப்பிரிவு ச.எண்.94/802 படி, மொத்தம் 2526 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 275 சதுர அடி நிலம், அன்னை அவென்யூ, ரத்தினமங்கலம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு 600048–ல் உள்ளது. எல்லைகள்: வடக்கு : 20 அடி சாலை, தெற்கு : பஞ்சாயத்து சாலை, கிழக்கு : மனை எண் 4, மேற்கு : மனை எண் 2ன் மீதமுள்ள பகுதி. **அடமானதாரரின் பெயர்: திரு. டேவிட் பிரபாகரன்** R **மற்றும் திருமதி. ஜெயசீலி**	1. 29.01.2026 2. அடையாள சுவாதீனம் 3. 25.09.2025 4. 02.01.2026 தேதியின்படி நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.38,54,484/– (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நாநூற்று எண்பத்து நான்கு மட்டும்) மற்றும் இதனுடன் 03.01.2026 முதல் முழுத்தொகையும் செலுத்தி முடிக்கும் வரை பொருந்தக்கூடிய வட்டி.

ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: திரு. விஷாம் நம்பூரி (மொபைல் எண். +919677285418)/ திரு. வேல்முருகன் கதிர்வேல் (மொபைல் எண். +919884718338) & சூரியா பெரியசாமி/விஜய் குமார் மேனன் (மொபைல் எண். 9600222111/9940572248)

இடம்: தமிழ்நாடு
தேதி : 03.02.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

2-வது சிறப்பு நீதிபதி
மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தீர்ப்பாயம், சென்னை-600 104.
மனு எண். 3995/2025

சண்முகம் ...மனுதாரர்
எதிர்
M. செரிப் பாஷா மற்றும் ஒருவர் ...எதிர் மனுதாரர்கள்

பெறுனர் :
M. செரிப் பாஷா,
எண்.1/106, ஏரிக்கரை தெரு,
கோமினியம்மன் நகர், முடிச்சூர்,
சென்னை-600048.

மேற்கண்ட வழக்கு ஒன்றாம் எதிர்மனுதாரரான தங்களின் வருகைக்காக 07.03.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களின் அட்சேபனையை தெரிவிக்கவேண்டும். தவறினால் மேற்கண்ட வழக்கில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக வழங்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

கே. ரவிக்குமார்
வழக்கறிஞர்

IN THE COURT OF THE HON'BLE SUB JUDGE AT ALANDUR
H.M.O.P. No.910 of 2024

திருமதி. ஐஸ்வர்யா
க/பெ. ஜெ. ஜெயபிரகாஷ்
த/பெ. ரமேஷ், எண். 12/190,
மெயின் ரோடு,
கூட்டுறவு குடியிருப்பு,
பொழிச்சலூர், பல்லாவரம்,
செங்கல்பட்டு மாவட்டம் – 600 074.
... மனுதாரர்

எதிர்

திரு. ஜெ. ஜெயபிரகாஷ்
த/பெ. எஸ். ஜெயவர்மன்
எண். 28, அண்ணா தெரு,
மலங்காநந்தபுரம்,
ஜமீன் பல்லாவரம், பல்லாவரம்,
செங்கல்பட்டு மாவட்டம் – 600 043.
... எதிர்மனுதாரர்

பெறுநர்
திரு. ஜெ. ஜெயபிரகாஷ்
த/பெ. எஸ். ஜெயவர்மன்
எண். 28, அண்ணா தெரு,
மலங்காநந்தபுரம்,
ஜமீன் பல்லாவரம், பல்லாவரம்,
செங்கல்பட்டு மாவட்டம் – 600 043.

மேற்குறிப்பிட்ட வழக்கில், மனுதாரர், உங்களுக்கு எதிராக இந்து திருமண அசல் மனு (HMOP) ஒன்றை இந்த மாண்புமிகு நீதிமன்றத்தில் விவாகரத்து வேண்டி தாக்கல் செய்துள்ளார் என்பதை இதன்மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட H.M.O.P.No.910 of 2024 வழக்கு, மனுவின் விசாரணைக்காக 26.03.2026 அன்று காலை 10.30 மணிக்கு இந்த மாண்புமிகு சார்பு நீதிமன்றம், ஆலந்தூர் முன்பு விசாரணைக்கு வரவிருக்கிறது. எனவே, மேற்கண்ட நாளிலும் நேரத்திலும், நீங்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலம் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி, மேற்கண்ட மனுவிற்கு உங்களுக்குள்ள எதிர்ப்புகள் / ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின், அவற்றை உரிய முறையில் தெரிவிக்க வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் ஆஜராகத் தவறினாலோ, அல்லது எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காவிட்டாலோ, உங்களுக்கு எதிர்ப்பு ஏதும் இல்லை எனக் கருதி, நீதிமன்றம் ஒருதலைப்பட்சமாக (Exparte) உங்களுக்கு எதிராக தீர்ப்பளிக்கப்படும் என்பதை நீங்கள் அறிந்திருப்பதாகக் கருதப்படும்.

B. ஜீவன் குமார்
P. நித்தியன்
வழக்கறிஞர்கள்

SUNDARAM FINANCE
Enduring values. New age thinking.

**31 டிசம்பர் 2025 அன்று முட